# பொதுக்காலம் 31ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

கடவுள் முன்னிலையில் தம்மைத் தாழ்த்திக் கொள்பவர்கள் உயர்த்தப்படுகிறார்கள் என்பதனை இன்றைய பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நமக்கு உணர்த்துகின்றது.

இன்றைய முதல் வாசகத்திலே இஸ்ரயேல் மக்களை வழிநடத்துகின்ற தலைவர்களையும், அர்ச்சகர்களையும், குருக்களையும் கடவுளின் திருப்பெயருக்கு மகிமை தருவதில் கவனம் செலுத்தாமல் குறையுள்ள பலிகளை கண்டிக்கின்றது இறைவாக்கினர் மலாக்கியாவின் அருள்வாக்கு. கடவுளின் பெருமையை மறந்து கடவுளைப் புறக்கணிப்பதால் தண்டனை அடைவார்கள் என்பதனை உணர்த்துகின்றது.

இரண்டாம் வாசகத்திலே புனித பவுல் தெசலோனிக்கரிடம் கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றியபோது அதை மனித வாக்காக இல்லாமல் தெய்வ வாக்காக ஏற்றுக் கொண்டதற்கு நன்றி கூறுகிறார். போதிப்பவர்களின் வாழ்வு முன்மாதிரியான வாழ்வாக அமைய வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது பவுலடியாரின் அனுபவங்கள்.

மக்கள் முன்னிலையில் முதன்மையான இடங்களையும், பகட்டான ஆடைகளையும், உயர்ந்த பதவிகளையும் நாடாமல் சகோதர மனப்பான்மையோடு வாழ வேண்டும் என்பதனை இன்றைய நற்செய்தி உணர்த்துகின்றது. ஆகவே நாம் மதிக்கப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பிலிருந்தும் அன்பு செய்யப்பட வேண்டும் எனும் ஆசையிலிருந்தும் புகழப்பட வேண்டும் எனும் மோகத்திலிருந்தும் முதனமைப்படுத்தப்பட வேண்டும் எனும் ஏக்கத்திலிருந்தும் விடுத்து, நாம் பிறரையே அதிகமாக அன்பு செய்யவும் பிறரையே முதன்மைப்படுத்தவும் பிறரையே புகழவும் விரும்புகின்றவர்களாக நமது தாழ்மையினால் உயர்வடைகின்ற உயர்ந்த உள்ளம் பெற்றிட வரம் வேண்டுவோம்.

மேலும் இம்மாதம் அனைத்துப் புனிதர்களையும் அனைத்து மரித்த விசுவாசிகளையும் நினைவு கூர்கின்றோம். ஆகவே நாமும் புனிதர்களின் பாதையில் துணிவுடன் நடைபோடவும், மரித்த அனைத்து விசுவாசிகளும் இறை ஒளியில், பேரமைதியில் நிலைவாழ்வு பெறவும் இத்திருப்பலியிலே மன்றாடுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எங்கள் விண்ணகத் தந்தையே இறைவா!

வெளிப்படையான வாழ்வு ஒரு உண்மையான வாழ்வு என்பதனை நாங்கள் உணர்ந்து, சடங்கு சம்பிரதாயங்களைத் தாண்டி, மனித நேயம் கண்டு வாழ்ந்திட உமது அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அதிகாரத்திற்கெல்லாம் அதிகாரியான இறைவா!

அதிகாரம் கடவுளிடமிருந்தே வருகிறது. கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரம் என்னும் கொடையைப் பெற்றுள்ள அதிகாரிகள் சுய மதிப்புக்காகவும், சுய இலாபத்துக்காகவும் பயன்படுத்தாமல் கூட்டுப் பொறுப்புணர்வு, கூட்டு முயற்சிகள், புதிய அமைப்பு முறைகளை அமைத்தல் இவைகளில் தங்களது அதிகாரப் பகிர்வை சரியான பாதையில் நடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தாழ்ச்சியை நேசிக்கின்ற இறைவா!

எங்கள் வாழ்வில் தாழ்ச்சியே மாட்சியின் படிக்கல் என்ற உண்மையை உணர்ந்து, எங்களோடு இணைந்து செயல்படுகின்றவரையும் ஏற்றுக் கொண்டும், அரவணைத்தும் வாழுகின்ற தூய்மையான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நல் வழிகாட்டியாம் எங்கள் இறைவா!

நாங்கள் நற்செயல்களை சிந்திப்பதோடும், சொல்வதோடும் நின்று விடாமல், நீர் எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியது போன்று நாங்களும் உம்மைப் பின்பற்றி எங்களோடு வாழ்கின்ற அயலாரையும் பிற இனத்தார், பிற மதத்தவர் என்று புறக்கணியாமல் நற்செயல்களை எங்களுடைய செயலில் காட்டி, உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. கடவுளின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டோர் வாழ்வடைவர் என்றவரே இறைவா!

எங்கள் வாழ்விற்குத் தேவையான தொழில் வளம் பெற்று, பொருளாதார நிலை உயரவும், அதனால் நாங்கள் தாய்மடி தவழும் குழந்தையென மன நிறைவோடு வாழவும், உழைப்பதற்குத் தேவையான நல்ல உடல் உள்ள நலனைத் தந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. லூயிஸ் ரெக்ஸ்லின், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com